பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
22 04 2024 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவை தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு வரும் 26ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

2. இளைஞர்கள், விவசாயிகள், மகளிர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் வளர்ச்சிக்காக பிஜேபி பாடுபடும் என்று அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. எளிய மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டதாக திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார்.

4. நான்கு ஆண்டு பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் நேரடியாக பி.ஹெச்.டி முனைவர் படிப்பில் சேரலாம் என்று பல்கலைக்கழக மானியக் குழு அறிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் குஜராத் அணி - பஞ்சாப் அணியையும், கொல்கத்தா அணி – பெங்களூரு அணியையும் வென்றன.

<u>*----- இனி விரிவான செய்திகள் ----*</u>

<<<<>>>>

மக்களவை தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள இன்று கடைசி நாளாகும். பிரச்சாரம் வரும் புதன்கிழமையுடன் முடிவடைய உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கேரளாவில் 20 இடங்கள், கர்நாடகாவில், 14, ராஜஸ்தானில் 13, உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் தலா 8, மத்தியப்பிரதேசத்தில் 7, அசாம், பீகார் மாநிலங்களில் தலா 5, மேற்குவங்கம் மற்றும் சத்தீஸ்கரில் தலா 3, திரிபுரா, ஜம்மு-கஷ்மீர் ஆகியவற்றில் தலா ஒரு இடத்திலும் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு வரும் 26ஆம் தேதியன்று நடைபெற உள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் **Banswara**–வில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, மக்களவைத் தேர்தலில் நிலையான மற்றும் வலுவான அரசு மத்தியில் அமைவதற்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நாட்டில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், எதிர்கால தேவைகள் குறித்து முடிவெடுப்பதற்கும் வலுவான அரசால் மட்டுமே முடியும் என்று சுட்டிக்காட்டினார்.

இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில், புதிய கொள்கைகளை வகுப்பது மகளிர், விவசாயிகள், பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர் உள்ளிட்டோருக்கான திட்டங்களை செயல்படுத்துவது ஆகியவற்றை பிஜேபி தொடர்ந்து செயல்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு நிலையான வீடுகள் அமைத்துத்தரப்பட்டுள்ளதாகவும், குடிநீர் வசதி செய்துதரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உஜ்வாலா இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்தின் மூலம், வீடுகளில் புகையில்லா சூழ்நிலையில் பெண்கள் உணவு சமைத்து வருவதாகவும் அவர் கூறினார்.

சூரியசக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

மேற்குவங்க மாநிலம் **Balurghat** என்ற இடத்தில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் செல்வி மம்தா பானர்ஜி, எளிய மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டதாக குற்றம் சாட்டினார்.

ஷெட்யூல்டு வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கு பிஜேபி தீர்வு காண முற்படுவதில்லை என்றும் அவர் கூறினார்.

மேற்குவங்க மாநிலத்திற்கு போதிய நிதியை மத்திய அரசு ஒதுக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ப. சிதம்பரம், குடியுரிமை திருத்தச் சட்டத்தையும், புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களையும் திரும்பப்பெறுவதற்கான நடவடிக்கைகளை காங்கிரஸ் மேற்கொள்ளும் என்று கூறினார்.

65 சதவீத விசாரணை கைதிகள் தண்டனை பெறாமலேயே சிறைவாசம் அனுபவித்து வருவது தேவையற்றது என்றும் அவர் கூறினார்.

விசாரணை கைதிகளில் 90 சதவீதத்தினர் எஸ் சி எஸ் டி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் 15 நாட்கள் போலீஸ் காவலிலோ அல்லது சிபிஐ காவலிலோ இருந்த பிறகு உடனடியாக பிணையில் விடுவிப்பதற்கான நடைமுறை சட்டப்பூர்வமாகவே கொண்டுவரப்பட வேண்டியது அவசியம் என்றும் திரு சிதம்பரம் வலியுறுத்தினார்.

இதனிடையே பிஜேபி மூத்த தலைவர் திரு. அனுராக் தாக்கூர், அரசியல் சாசன திருத்தங்களை பிஜேபி அரசு மேற்கொள்வது தொடர்பாக காங்கிரஸ் கட்சி தவறான தகவல்களை அளித்து மக்களிடையே குழப்பதை ஏற்படுத்தி வருவதாக குற்றம் சாட்டினார்.

பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் காங்கிரஸ் ஆட்சியின்போது 62 முறை அரசியல் சாசனத்தில் திருத்தம் செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

பிஜேபி மூத்த தலைவர் திரு. நரேந்திர மோடி இன்று உத்தரப்பிரதேச மாநிலம் அலிகாரில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

<<<<>>>>

மக்களவை, மாநில சட்டப்பேரவை மற்றும் இடைத்தேர்தல் வாக்குப்பதிவு சதவீதம் குறித்த உத்தேச விவரங்கள் தேர்தல் ஆணையத்தின் **‘VOTER TURNOUT’** என்ற செல்போன் செயலியில் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தகவலை தெரிவித்துள்ள மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹூ, கடந்த 19-ஆம் தேதி நடைபெற்ற மக்களவை தேர்தலில் பதிவான வாக்கு விவரங்களையும் தெரிந்துகொள்ளலாம் என்று கூறியுள்ளார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பத்ம விருதுகளை வழங்குகிறார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் முன்னாள் குடியரசு துணைத்தலைவர் திரு. எம். வெங்கைய நாயுடு, பரதநாட்டியக் கலைஞர் டாக்டர் பத்மா சுப்பிரமணியம் ஆகியோருக்கு பத்ம விபூஷன் விருதுகளை வழங்கி கௌரவிக்கிறார்.

மறைந்த சமூக கல்வியாளர் **Bindeshwar Pathak-**கிற்கு பத்ம விபூஷன் விருது, இறப்புக்கு பிந்தைய விருதாக வழங்கப்படுகிறது.

நடிகர் மிதுன் சக்ரபர்த்தி, பிரபல பின்னணிப் பாடகி திருமதி உஷா உதுப் ஆகியோருக்கு பத்ம பூஷன் விருது வழங்கப்படுகிறது.

சமூக செயற்பாட்டாளர் டாக்டர் சீதாராம் ஜிண்டால், இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் தேஜாஸ் மதுசூதன் பட்டேல், முன்னாள் உத்தரப்பிரதேச ஆளுநர் திரு. ராம்நாயக் ஆகியோரும் இன்று பத்ம பூஷன் விருது பெறுகிறார்கள்.

பத்ம விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தையொட்டி அறிவிக்கப்பட்டு வருகிறது.

<<<<>>>>

நான்கு ஆண்டு பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் நேரடியாக தேசிய தகுதித் தேர்வுக்கு விண்ணப்பித்து பி.ஹெச்.டி பட்டப்படிப்பைத் தொடரலாம் என்று பல்கலைக்கழக மானியக் குழு அறிவித்துள்ளது.

குறைந்தபட்சம் 75 சதவீத சராசரி மதிப்பெண்ணோ, அல்லது அதற்கு இணையான தரமதிப்பீட்டையோ பெற்றிருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு ஆண்டு பட்டப் படிப்பில் படித்திருந்த பாடப்பிரிவிலும், வேறு எந்தத் துறை பாடப் பிரிவிலும் முனைவர் கல்வியை தொடர்ந்து படிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள நடைமுறையின்படி முதுநிலை பட்டப்படிப்பில் குறைந்தது 55 சதவீதம் அல்லது அதற்கு இணையான தரமதிப்பீடு பெற்றவர்கள் மட்டுமே முனைவர் பட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

<<<<>>>>

கேரளாவில் பறவைக் காய்ச்சல் நோய் பரவி வருவதையடுத்து, அம்மாநிலத்தை ஒட்டியுள்ள தமிழக எல்லைப் பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தில் இருந்து கோழி, வாத்து உள்ளிட்ட பறவை இனங்கள் தமிழகத்திற்குள் கொண்டு வரப்படுவது முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தின் எல்லைப் பகுதிகள், தேனி மாவட்டத்தில் போடிமெட்டு, குமுளி ஆகிய இடங்களில் உள்ள சோதனைச்சாவடிகள் ஆகியவற்றில் சுகாதாரத்துறை தீவிரமாக கண்காணித்து வருகிறது.

தமிழக எல்லைக்குள் வரும் வாகனங்களுக்கு கிரிமி நாசினி தெளிக்கப்படுகிறது.

<<<<>>>>

மதுரை சித்திரைத் திருவிழாவில் நேற்று மாலை அருள்மிகு கள்ளழகர் தங்கப் பல்லக்கில் மதுரை புறப்பட்ட நிகழ்வு நடைபெற்றது.

இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

இந்நிலையில் கள்ளழகரை எதிர்சேவை செய்யும் நிகழ்ச்சி மூன்றுமாவடியில் இன்று நடைபெறுகிறது.

கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் விழா நாளை அதிகாலை நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

வெளியூர்களில் இருந்து சென்னை வரும் பயணிகளின் நெரிசலைக் குறைக்கும் நோக்கில் காட்டாங்கொளத்தூரில் இருந்து தாம்பரம் வரை கூடுதலாக சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே இயக்குகிறது.

இன்று காலை 10.05 மணி வரை மொத்தம் 10 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வேயின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

முப்படைகளின் தலைமைத் தளபதி திரு. அனில் சௌஹான், அரசுமுறைப் பயணமாக பிரான்ஸ் புறப்பட்டார்.

------------

இந்தியா - இலங்கை இடையேயான வளமான கலாச்சார தொடர்புகளை வெளிப்படுத்தும் வகையில் தலைநகர் கொழும்புவில் ராமாயண காட்சி விழா நேற்று நடைபெற்றது.

------------

கடந்த நிதியாண்டில் நாட்டின் நேரடி வரி வருவாய் 19 லட்சத்து 58 ஆயிரம் கோடி என்று மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.

------------

ஒடிஷா மாநிலத்தில் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் உள்ள **Similipal** புலிகள் காப்பக பகுதியில் கடும் வெப்பம் காரணமாக தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

------------

திண்டுக்கல் அருள்மிகு அபிராமி அம்மன் கோவில் திருக்கல்யாண உற்சவம் நேற்று நடைபெற்றது.

------------

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் முருகப்பெருமான் - தெய்வானை திருக்கல்யாணம் நேற்று நடைபெற்றது.

------------

விழுப்புரம் கூவாகம் கூத்தாண்டவர் கோயில் திருவிழாவை ஒட்டி திருநங்கைகளுக்கான அழகிப் போட்டி நடைபெற்றது.

------------

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் சித்ரா பௌர்ணமி கிரிவலத்திற்கான அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு. பாஸ்கர பாண்டியன் தெரிவித்துள்ளார்.

------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

சண்டிகரில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் களமிறங்கிய பஞ்சாப் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 142 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய குஜராத் அணி 19 புள்ளி ஒரு ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 146 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

4 விக்கெட்டுகளை வீழ்த்திய குஜராத் அணியின் சாய்கிஷோர் ஆட்டநாயகனாக அறிவிக்கப்பட்டார்.

முன்னதாக நேற்று மாலை கொல்கத்தாவில் நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா அணி ஒரு ரன் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வென்றது.

முதலில் களமிறங்கிய கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 222 ரன் எடுத்தது.

223 ரன் என்ற இலக்குடன் களமிறங்கிய பெங்களூரு அணி 20 ஓவரில் 221 ரன் எடுத்து வெற்றி வாய்ப்பை தவறவிட்டது.